# பத்திரிக்கைச் செய்தி

## இறப்பு சான்றிதழ் வழங்க ரூ.3,000/- லஞ்சம் கேட்டு பெற்ற இளநிலை உதவியாளருக்கு 3 ஆண்டு சிறை தண்டனையும், ரூ.3,000/-ம் அபராதம் விதித்து தீர்ப்பு

புகார்தாரர் திரு.குணசேகரன், கடலூர் மாவட்டம், பழைய வண்டிப்பாளையம், ராமராஜ தெருவில் வசித்து வந்தார். இவர் தன்னுடைய தாய்வழி மாமா தண்டபாணியின் இறப்பு சான்றிதழ் வேண்டி கடலூர் நகராட்சி அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.ராமன், இளநிலை உதவியாளர், எச்-3 பிரிவு, கடலூர் நகராட்சி அலுவலகம், கடலூர் மாவட்டம் என்பவர் தனக்கு ரூ.3,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர் மாவட்டத்தில் புகார் அளித்தார். புகார் சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையானது கடந்த 27.10.2016 மேற்கொள்ளப்பட்டு திரு.ராமன், இளநிலை உதவியாளர் கைது செய்யப்பட்டார். மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையை தொடர்ந்து வழக்கு தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்றம், கடலூர் மாவட்டத்தில் நடத்தப்பட்டது. இவ்வழக்கில் இன்று 13.10.2023 தீர்ப்பு வழங்கப்பட்டது. மேற்படி தீர்ப்பில் திரு.ராமனுக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனையும், மற்றும் ரூ.3,000/-ம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.